Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் நூலகத் துறை சார்பாக மத்திய அரசின் மின் நூலகச் சங்கம் தொடக்கம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் நூலகத் துறை சார்பாக மத்திய அரசின் மின் நூலகச் சங்கம் தொடங்கி **(National Digital Library of India, Club)** விழிப்புணர்வு நிகழ்ச்சி இணையவழியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** அவர்கள் தலைமை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்**, கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார்.

கணினி பயன்பாட்டியல் துறையை சேர்ந்த பேராசிரியர் **டி.அருண்குமார்** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கரக்பூர் இந்திய தொழில்நுட்பக் கழகத்தை சேர்ந்த **(ஐஐடி) முனைவர் விக்னேஷ் சொர்ண மோகன்** அவர்கள் கலந்து கொண்டு பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் தேசிய மின் நூலகத்தை பயன்படுத்தும் முறைகளைப் பற்றியும் அதில் இருக்கும் 4 கோடிக்கு மேல் உள்ள மின் நூல்கள் பயன்படுத்தும் முறையைப் பற்றியும் செய்முறை விளக்கத்துடன் விளக்கினார். பேராசிரியர்கள் மாணவ மாணவியர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். இதில் துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை கணிதத் துறை பேராசிரியை **எ.செலின்** தொகுத்து வழங்கினர். சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியின் தலைமை நூலகர் முனைவர் **கே. விஜயகுமார்** நன்றி கூறினார். நூலகத் துறையைச் சேர்ந்த திருமதி **ரேகா** மற்றும் திருமதி **சுமதி** ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**